**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**

**--------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**-----------------------**

### 1.1 அபிப்பிராயம்

**--------------------**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**-----------------------------------------------------**

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

**----------------------------------------------**

மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்விடல் கொள்கை மாற்றப்பட்டிருந்த போதிலும் இ.க.நி. இல. 03 இன் படி கணக்குகளிற்கான குறிப்பொன்றாக வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

**-----------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் தலைமை அலுவலகத்திற்கு வர்ணம் தீட்டுவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,177,632 மூலதனச் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கம்பஹா மாவட்ட அலுவலகத்தினை 05 ஆண்டு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்கையில் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிட உரிமையாளரிற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 144,000 வைப்புப் பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்காக ஊவா மாகாண அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டிட வாடகையான ரூபா 156,000 கணக்கீடு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிற் பாவனை பிளாத்திக்கு கழிவு முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 01 மில்லியன் கட்டுநிதி முற்பணத்திலிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவிட்டிருந்த ரூபா 936,819 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

---

மாளிகாவத்த செயலக வளவில் நடாத்திச் செல்லப்பட்டிருந்த மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அலுவலகத்திற்கான நிலுவை வாடகையானது செயலகத்தின் நிதிக்கூற்றுக்களின் படி 2006 ஒக்தோபர் 31 இல் ரூபா 11,790,000 ஆக காணப்பட்ட போதிலும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 1,794,584 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 9,995,416 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 54,054,405 வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய கடன்களிற்காக காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. அதில் ரூபா 327,549 ஆன 03 மீதிகள் 02 தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாகக் காணப்படுகின்றன.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் படி செலுத்தவேண்டிய கணக்குகளின் பெறுமதியான ரூபா 38,113,008 இற்கு காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 1,009,419 பெறுமதி கொண்ட 06 செலுத்தவேண்டிய மீதிகள் 02 தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாகக் காணப்பட்டன.

(இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள முற்செலுத்திய முற்பணங்களின் படி 16 பிராந்திய அலுவலகங்கள், 02 செயற்திட்டங்கள், மேல் மாகாண அலுவலகம், தலைமை அலுவலகம் என்பவற்றிற்கு காசுக் கட்டுநிதியாக (Cash Imprest) ரூபா 440,000 தொகையும் சில்லறைக் காசுக் கட்டுநிதியாக ரூபா 232,500 தொகையும் வழங்கப்பட்டிருந்தன. 2010 திசெம்பர் 31 ஆந் திகதியன்று இக் கட்டுநிதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

04 சந்தர்ப்பங்களிற்குரிய ரூபா 27,970,914 மொத்தப் பெறுமதி கொண்ட கொடுக்கல்வாங்கள் தொடர்பாக செயற்திட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகள், விபரமான பட்டோலைகள், கொம்பொஸ்ட் பின் பகிர்ந்தளித்தல் விபரம், பின் விநியோக நட்டம், அனுமதிப்பத்திர விநியோக பட்டோலைகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஏற்பாட்டுப் பட்டோலைகள் போன்ற சான்றுகள் இன்மை காரணமாக் கணக்காய்வில் அவற்றைத் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு** | **இணங்கி ஒழுகாமை** |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் | வரைபுப் பாதீடு மீளாய்வாண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் பாதீடானது 2010 ஜூலை 27 ஆந் திகதியன்றே பணிப்பாளர் |

| | |
|---|---|
| திணைக்களச் சுற்றறிக்கையின் 5.2.6 ஆம் பிரிவு | சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட இறுதிப் பாதீடு மீளாய்வாண்டு இறுதிவரை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப்பிரமாணங்கள் கையேடு

-----------------------------------------------

| | |
|---|---|
| (i) நி.பி. 371(2)(இ) | I. வழங்கப்பட்ட முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப் பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 10 சந்தர்ப்பங்களிலான ரூபா 107,370 முற்பணத்தினை தீர்வு செய்வதற்கு 01 தொடக்கம் 07 மாதங்கள் வரை காலதாமதம் செய்யப்பட்டிருந்தது.<br><br>II. ரூபா 189,450 காசுக் கட்டுநிதி 16 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்ததாக காணப்பட்டதுடன் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 756(1) | வருடாந்தப் பொருள் மெய்மையாய்விற்காக ஒவ்வொரு ஆண்டினதும் திசெம்பர் 15 ஆந் திகதியன்று அல்லது அதனை அண்மித்த திகதியில் மெய்மையாய்வுச் சபை ஒன்றைத் தாபித்தல் வேண்டுமாயினும், 2010 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியினால் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்ட நலன்களை மாத்திரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தமது ஊழியர்களிற்கு செலுத்தவதற்கு கூட்டுத்தாபன ங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிற்கு முடியுமாயினும் அவ்வாறான அங்கீகாரம் இன்றி 2009 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்விற்காக வழமையான கடமை |

நாட்களில் சேவையில் ஈடுபட்டமைக்காக 22 உத்தியோகத்தர்களிற்கு கொடுப்பனவாக ரூபா 69,625 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) திறைசேரிச் சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| (i) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நாளதுவரையாகப் பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 நொவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஆலோசனைக்கமைய கணனிகள் பதிவேடொன்று பேணிவரப்பட்டி ருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதி விளைவுகள்

2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 8,871,112 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 12,679,973 ஆகும். அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 21,551,085 முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு வருமானம் ரூபா 16,803,101 ஆல் அதிகரித்திருந்தமையும் செயற்பாட்டு மற்றும் செயற்பாடற்ற செலவினம் ரூபா 4,747,983 ஆல் குறைவடைந்திருந்தமையும் நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்குப் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளிற்கான நிதி நிலைமைகள் கீழுள்ளவாறாகும்.

| ஆண்டு | மிகை/(பற்றாக்குறை) |
| --- | --- |
| | ரூபா |
| 2007 | (18,489,478) |
| 2008 | (3,592,102) |
| 2009 | (12,679,973) |
| 2010 | 8,871,112 |

### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானமான ரூபா 465,508,384 இனை பகுப்பாய்வு செய்கையில் அதில் உள்ளடங்கியிருந்த அதிகாரசபையின் வருமானம் ரூபா 111,087,595 ஆகும். அது மொத்த வருமானத்தில் 24% ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கான இந்த வருமானம் ரூபா 82,403,313 அல்லது 18% ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டினை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்த போது வருமானத்தில் 35% அதிகரிப்பு காட்டப்பட்து. பிராந்திய அலுவலக வருமானங்கள் மற்றும் அதிகாரசபையின் வருமானங்கள் என மதிப்பீட்டில் வெவ்வேறாக காண்பிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் “அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியினால் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்ட நலன்களை மாத்திரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தமது ஊழியர்களிற்கு செலுத்தவதற்கு கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிற்கு முடியும்” எனக் குறிப்பிடப்பட்டிருக்கையில் அதற்கு முரணாக 1993 ஆம் ஆண்டு தொடக்கம்

வருகைப் படிகளுக்காகக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன் 255/1176/06 ஆம் இலக்க முகாமைத்துவச் சபைப் பத்திரம் மற்றும் அவை தொடர்பான 255/2/11 ஆம் இலக்க முகாமைத்துவச் சபைத் தீர்மானத்திற்கமைய வருகைதரும் படியாக மீளாய்வாண்டில் ரூபா 4,196,100 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறையொன்றை செயற்படுத்துவதற்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயினும், அவ்வாறான அங்கீகாரமொன்றின்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் மாத்திரம் அனுமதிப்பத்திர வருமானத்தில் 7% இற்குச் சமமான ரூபா 629,604 தொகையொன்று மீளாய்வாண்டில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தொகை அதிகாரசபையின் 2937303 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

மேலும், அதிகாரசபையினால் உழைக்கப்பட்ட அனுமதிப்பத்திர வருமானத்திலிருந்து 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டிருந்த வருமானத்தில் 7% ஆன ரூபா 2,109,948 தொகையொன்று வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் 10 தொடக்கம் 12 மாதங்களிற்கு இடைப்பட்ட காலமாக பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தது.

(இ) (i) பாவனையின் பின்னரான பிளாத்திற்கு கழிவுப் பொருள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்டிருந்த செயற்திட்ட நடவடிக்கை ஒன்றான அகற்றப்பட்ட பிளாத்திக்குகள், பொலித்தீன் பாவனையிலிருந்து கனிய எரிபொருள் (பெட்ரல், டீசல், மண்ணெண்ணை) மற்றும் பெற்றோலிய வாயுவினை உற்பத்தி செய்யும் நடைமுறைக்காக 2009 திசெம்பர் 08 ஆந் திகதி கூட்டுமுயற்சி வணிக உடன்படிக்கையொன்றில் அதிகாரசபை கைச்சாத்திட்டிருந்த போதிலும், பின்னர் பொலிப்டோ லங்கா தனியார் கம்பனி என்ற பெயரில் கம்பனியொன்றை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வளவில் தாபிப்பதற்கும் அதன் பங்கு மூலதனத்தில் 60% இனை மத்திய சுற்றாடல் அதிகாரபைக்கும் 30% இனை செயற்திட்ட தாபிப்பாளரிற்கும் எஞ்சிய 10% இனை மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இரசாயன செயற்பாட்டுப் பொறியியல் பிரிவிற்கும் இடையில் பகிர்ந்தளிக்கும் விதத்தில் முத்தரப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) மேற்படி செயற்திட்டத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் B.3 நிகழ்ச்சித்திட்டத்தின் B.3.1 நடவடிக்கையின் கீழ் 2009 மற்றும் 2010 ஆம்

ஆண்டுகளில் செயற்திட்டத்திற்காக செய்யப்பட்டிருந்த உள்ளபடியான செலவினம் ரூபா 22,635,909 ஆகும். மேற்படி செலவினம் செய்யப்பட்டிருந்கையில் 2010 ஒக்தொபர் 04 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியின் மூலம் எரிபொருள் உற்பத்தி முடிவுப்பொருள் செயற்திட்டமானது பாவனையின் பின்னரான பிளாத்திக்குக் கழிவுப் பொருள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு மின்வலு சக்தி அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்தது. அதிகாரசபையினால் செய்யப்பட்டிருந்த செலவினத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்களிற்காகப் பேணப்பட்ட 14 வங்கிக் கணக்குகளினது கணக்கு மீதிகளின் பெறுமதியான ரூபா 17,134,762 தொகை 2010 திசெம்பர் 31 இல் பிரதான வங்கி நடைமுறைக் கணக்கிற்கு மாற்றீடு செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இம் மீதி தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் பட்டோலையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மட்டக்களப்புக் கிளையின் ரூபா 884,369 தொகை 2011 ஓகஸ்ட் 30 ஆந் திகதி வரை பிரதான கணக்கிற்கு மாற்றீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 2.2.1 செயலாற்றல்

-----------------

பாவனையின் பின்னரான பிளாத்திக்குக் கழிவுப் பொருள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளின் நிறைவேற்றல்களின் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் செயற்படுத்தப்படாத 02 நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டில் ரூபா 360,000 முழுமையாகப் பயன்படுத்தப்படாது சேமிப்பாகியிருந்தது.

(ஆ) 96% இற்கும் 50% இற்கும் இடையில் சேமிப்புக்கள் காணப்பட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை 15 ஆனதுடன் சேமிப்பு ரூபா 3,895,000 ஆகும்.

(இ) 05 நடவடிக்கைகளிற்கான அங்கீகரித்த எல்லையினை மீறி செலவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 1,629,000 ஆகும்.

**2.2.2 குறைவாகப் பயன்படுத்திய நிதியங்கள்**

---------------------------------------------------------

மீண்டெழும் மானியத்தின் கீழ் 45 விடயங்களிற்காக கிடைத்திருந்த செயற்திட்ட மானியம் ரூபா 32,452,141 தொகை நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் பயன்படுத்தாது வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. அம் மீதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 5,731,287 தொகையானது 01 இற்கும் 07 இற்கும் இடைப்பட்ட காலமாக பயன்படுத்தாது இருக்கக் காணப்பட்டது.

**2.2.3 பதவியணி முகாமைத்துவம்**

-----------------------------------------

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரித்த பதவியினர் 802 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியினர் 674 ஆக இருந்தது. இதற்கிணங்க வெற்றிடம் 128 ஆகக் காணப்பட்டது.

| புதவி | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உயர் முகாமைத்துவ மட்டம் | 21 | 18 | 03 |
| இடை முகாமைத்துவ மட்டம் | 76 | 74 | 02 |
| செயற்பாட்டு முகாமைத்துவ மட்டம் | 705 | 582 | 123 |
| | -------- | -------- | ------- |
| | 802 | 674 | 128 |
| | ==== | ==== | ===== |

### 2.2.4 வாகனப் பயன்பாடு

-------------------------

அதிகாரசபையிடம் 49 வாகனங்களைக் கொண்ட வாகண அணியொன்று காணப்படுவதுடன் அதில் 21 வாகனங்கள் ஒதுக்கப்பட்டவையாகவும் 16 வாகனங்கள் குழாம் வாகனங்களாகவும் 12 வாகனங்கள் பிராந்திய அலுவலகங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டவையாகவும் இருந்தன. ஆண்டிற்கான எரிபொருள் மற்றும் பேணுகை நடவடிக்கைகளிற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 21 மில்லியன் மொத்தச் செலவினத்தில் வாடகை வாகனங்களிற்காக ரூபா 04 மில்லியன் அல்லது 19% செலவிடப்பட்டிருந்தது.

### 2.2.5 உள்ளகக் கட்டுப்பாடு

--------------------------------

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 03 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருந்தது. மீளாய்வாண்டில் மேல்மாகாணம், வட மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 05 மாகாண அலுவலகங்கள் உள்ளகக் கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் மத்திய மாகாண மற்றும் ஊவா மாகாண அலுவலகங்கள் கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை.

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஜனவரி தொடக்கம் திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கான மதிப்பீட்டுச் செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினப் பரிசோதனையில் 07 செலவின விடயங்களிற்கு 100% இனாலும் 02 செலவின விடயங்களிற்கு 50% இனாலும் மதிப்பீட்டு எல்லையினை மீறி செலவுகள் செய்யப்பட்டிருந்தமையால் பாதீடானது பயனுள்ள கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக அதிகாரசபையின் நடவடிக்கைகளிற்காக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட செலவு எல்லையினை மீறி 26 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களின் கீழ் ரூபா 38,488,751 தொகையொன்று முறைப்படியான முன் அங்கீகாரமின்றி அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(இ) வெளிநாட்டுப் பயணச் செலவின விடயத்தின் கீழ் 94% அல்லது ரூபா 939,515 தொகை ஏற்பாட்டிற்கும் மேலாக செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 4 செயற்திட்ட நடவடிக்கைகளின் கீழ் 5% இற்கும் 355% இற்கும் இடைப்பட்ட சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் நடவடிக்கையொன்றிற்காக மதிப்பீடு தயாரிக்கப்படாது கிடைத்திருந்த ரூபா 400,000 தொகையினை மீறி 23% செலவு செய்யப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்தல்

(இ) நிலையான சொத்துக்கள்

(ஈ) வருகைப் படிகளைச் செலுத்துதல்

(உ) பதிவேடுகளைப் பேணுதல்

(ஊ) கொள்வனவு நடைமுறை

(எ) மீண்டெழும் மானியம்